[2003 ஏப்ரல் 7

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு, விதிமுறைகளுக்கு உட்பட்டு தற்சமயம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: தலைவரவர்களே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாமுண்டீஸ்வரி கோயில், ஜலகண்டேஸ்வர் கோயில் இல்லை.

வினா எண் 182, திருமதி கு. கலாவதி, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

182—

தொழிற்பயிற்சி நிலையம்

***9162 அ—திருமதி கு. கலாவதி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியத்தில் அரசு தொழிற் பயிற்சி நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி கு. கலாவதி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, `கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்' என்பதைப்போல, 'மலைவாழ் மக்களின் மான் கூட்டத்து மகளிரும் இம்மாமன்றத்திற்கு உரியவரே' என எடுத்துரைத்த என் தாயை வணங்குகிறேன். புலியை முறத்தாலே விரட்டியடித்த மலை மகளான

2003 ஏப்ரல் 7]

எங்களுக்குப் புள்ளி மானாய் இருந்து புலிப் பாலைப் புகட்டிவிடும் என் தாயே, உங்களின் பாதம் போற்றி வணங்குகிறேன்.

கொல்லிமலைப் பகுதியில் சுமார் 50,000-க்கும் மேற்பட்ட மலைவாழ் மக்கள் வசித்து வருகின்றனர். கொல்லிமலையில் ஒரு மேல்நிலைப் பள்ளியும், 3 உயர்நிலைப் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. அங்கு படிக்கின்ற மாணவ, மாணவிகள் ஐ.டி.ஐ. படிக்கச் செல்ல வேண்டும் என்றால், 150 கிலோ மீட்டர் செல்ல வேண்டி உள்ளது. எனவே, இதனை மறுபரிசீலனை செய்து, அங்கு படிக்கின்ற மலைவாழ் மக்களுக்குத் தனியாக அடுத்த ஆண்டாவது ஐ.டி.ஐ. அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் இல்லை என்பது உண்மைதான். ஆனால், நாமக்கல் மாவட்டத்தில் 12 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இருக்கின்றன. அவற்றில் 984 இருக்கைகள் உள்ளன. இதிலேகூட, ஒதுக்கப்பட்ட இருக்கைகள் அளவுக்கு மாணவர்களின் சேர்க்கை குறைவாக இருக்கிறது. அந்த மாவட்டம் முழுவதும் இருக்கின்ற அந்தக் கணக்கை வைத்துப் பார்க்கிறபோது, கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு என்று தனியாக புதிதாக ஒரு தொழிற்பயிற்சிப் பள்ளியைத் துவக்கும் திட்டம் அரசிடம் இல்லை. மேலும், தனியாக ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தைத் துவக்க வேண்டுமென்றால், அதற்குக் கிட்டத்தட்ட 135 இலட்சம் ரூபாய் அரசின் சார்பில் செலவிடப்பட வேண்டிய நிலை இருக்கிறது. கட்டடம் கட்டுவதற்கு 75 இலட்சம் ரூபாய், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு 40 இலட்சம் ரூபாய், பணியாளர்கள் சம்பளம் போன்றவற்றிற்காக 20 இலட்சம் ரூபாய் என்று இப்படிச் செலவிடப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இவற்றை, எல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, அரசின் சார்பில் தொழிற்பயிற்சி நிலையம் துவங்குகின்ற சூழ்நிலை இப்போது எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எதிர்காலத்தில் நிதி நிலைக்கேற்பப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டத்தில் 984 இடங்கள் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்டு, அதிலே பல இடங்கள் காலியாக இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு என்ன காரணம்? அந்தத் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் எல்லாம், அந்த இடங்களில் எல்லாம் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்த அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட இடங்கள்-அதாவது நான் சொன்னது; அந்த மாவட்டத்தில் ஜீவா தொழிற்பயிற்சி நிலையம், முத்துக்காப்பட்டி; வெங்கடேஸ்வரா தொழிற்பயிற்சி மையம், எருமைப்பட்டி; பி.ஜி.பி. தொழிற்பயிற்சி மையம், வேட்டாம்பாடி; கொங்கு தொழிற்பயிற்சி மையம், கீரம்பூர்; ஈஸ்வரா தொழிற்பயிற்சி மையம், இலச்சிபாளையம்; அங்கப்பா தொழிற்பயிற்சி மையம் சௌதாபுரம்; ராஜம்மாள் ரெங்கசாமி தொழிற்பயிற்சி மையம், தொக்கவாடி; திருச்செங்கோடு; கந்தசாமி கந்தன் தொழிற்பயிற்சி மையம், நாமக்கல்; பத்மாவதி தொழிற்பயிற்சி மையம், இராசிபுரம்; சி. இராகவேந்திரா தொழிற்பயிற்சி மையம், இராசிபுரம்; ஆண்டவர் தொழிற்பயிற்சி மையம், நாமக்கல், அதாவது மோகனூர்; இராமகிருஷ்ணா தொழிற்பயிற்சி மையம், குருசாமிபாளையம் ஆகிய 12 இடங்களில் தனியார் தொழிற்பயிற்சி மையங்கள் இருக்கின்றன. அந்தத் தொழிற்பயிற்சி மையங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இடங்கள்--மொத்த இருக்கைகளின் எண்ணிக்கை--984. அதிலேகூட மாணவர்களுடைய வருகை குறைவாக இருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 183, திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

183—

உழவர்களுக்குப் பயிற்சி

***19907—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—